2006 டிசம்பர் 5]

மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

7—

நீதிமன்ற வளாகம்

***5636—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் நீதிமன்றத்திற்குப் புதிய நீதிமன்ற வளாகம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம், அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான ராசிபுரம் பகுதியிலே, 1981–லே அந்தக் கட்டடம் கட்டுவதற்காக 1.85 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடியவிரைவிலே அங்கே உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றக் கட்டடம் கட்டித்தர முன்வருவார்களா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை, வருகிற நிதி ஆண்டிலே அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

திரு. பி.என். பெரியண்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் பகுதியிலுள்ள முன்சீப் கோர்ட்டுக்கு அரசாங்கத்திடம் 10 ஆண்டுகளுக்கு முன்பே இடம் சமர்ப்பிக்கப்பட்டும்,

அங்கு நீதிமன்றக் கட்டடம் கட்டப்படாமல், தனியார் அலுவலகத்தில் நடைபெற்றுவருவதால், அங்கு நீதிமன்றக் கட்டடம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகங்கள் கட்டுவதற்கு தமிழக அரசு, மத்திய அரசினுடைய 50 சதவிகிதப் பங்கீட்டை எதிர்நோக்கிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரண்டுமுறை நினைவூட்டல் கடிதம் மத்திய அரசுக்கு எழுதியிருக்கின்றார்கள். வெகு விரைவிலே அந்த நிதி கிடைத்தவுடனே, மாநில அரசினுடைய நிதி 50 சதவிகிதம் அளிக்கப்பட்டு, பல புதிய நீதிமன்ற வளாகங்கள் தமிழகத்திலே கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஏழு ஆண்டுகளாகவே மத்திய அரசால் அனுப்பப்படுகிற, 50 சதவிகிதப் பங்கீடு வருகிறது, வருகிறது என்று சட்டத் துறை அமைச்சர்கள் தொடர்ந்து இந்த அவையிலே சொல்லிக்கொண்டிருப்பதைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஏற்கெனவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதிலே தலையிட்டு—நம்முடைய தமிழகத்தைச் சேர்ந்தவர் அங்கே அமைச்சராக இருக்கிற காரணத்தினாலே—பல ஊர்களில், நீதிமன்றங்களில் எங்களுடைய மாவட்டத்திலேயே 7 இடங்களில் தேவைப்படுகின்றன. அதேபோல, தமிழகம் முழுவதிலும்—பல இடங்களில் இந்த 50 சதவிகிதம் மத்திய அரசு கொடுக்கவேண்டியதை கொடுக்காமல் இருக்கின்ற காரணத்தினாலே, இதே பதிலை சட்டத் துறை அமைச்சர் சொல்லி, கட்டடங்கள் வராமல் இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தினாலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு—எப்படியாவது வரக்கூடிய அந்த 50 சதவிகிதத்தை மத்திய அரசிடமிருந்து பெற்று, எல்லா நீதிமன்றங்களையும் கட்டுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஒரே பதிலைத் தொடர்ந்து சொல்வதாக இங்கே தெரிவித்தார்கள். ஆனால், நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள், அப்படியில்லாமல் மத்திய அரசினுடைய நிதியை எதிர்பார்க்காமல், இந்த மாதம் தமிழகத்திலே மிகவும் பின்தங்கியிருக்கிற

2006 டிசம்பர் 5]

பெரம்பலூர் மாவட்டத்திற்கு, மாவட்ட ஒருங்கிணைந்த வளாகத் திட்டத்திற்காக, ரூ. 8¾ கோடியை தமிழக அரசு நிதியை ஒதுக்கியிருக்கிறார்கள் என்ற ஒரு நல்ல செய்தியை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசு எதிர்பார்த்துக் கொண்டிருப்பதற்குக் காரணம், தமிழகத்திலே பல புதிய நீதிமன்ற வளாகங்கள் கட்டுவதற்கு கோரிக்கைகள் இருக்கின்றன. அந்த புதிய நீதிமன்ற வளாகங்கள் கட்டுவதற்கு ஏற்கெனவே ஒரு திட்ட மதிப்பீடு (Perceptive Plan) தொலைநோக்குத் திட்டம் ரூ. 200 கோடிக்கு மேலாக, அதிலே செலவிட வேண்டியிருக்கிறது. மாநில அரசு தயாராக இருக்கிறது. இது தமிழகத்திற்கு மட்டுமல்ல; இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை மாநிலங்களும், 1993ஆம் ஆண்டிலிருந்து இதே திட்டத்தைத்தான் தொடர்ந்து கடைபிடித்து வருகின்றன. அதை எதிர்பார்க்காமல் நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் தாயுள்ளத்தோடு பின்தங்கி இருக்கிற மாவட்டத்திற்கு 8¾கோடி ரூபாய் வழங்கியிருக்கிறார்கள்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நீதிமன்றம் நூற்றாண்டு பழமையுடைய நீதிமன்றம். அந்த நீதிமன்றத்திலிருந்து கட்டடம் கட்டுவதற்காக ஒரு கருத்துரு தயாரிக்கப்பட்டு, சென்னை உயர் நீதிமன்ற கட்டுமானப் பிரிவில் அந்தக் கருத்துரு தற்போது உள்ளது. அது ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்குரிய நிதியொதுக்கப்பட்டு, குழித்துறை நீதிமன்ற வளாகம் கட்டித் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரி இருப்பதைப்போல, மிக அத்தியாவசியமான, பழுதடைந்திருக்கிற நீதிமன்றங்களைக் கட்டுவதற்கு, மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்தாலோசித்து, வருகின்ற ஆண்டுகளிலே தொடர்ந்து ஒவ்வொரு நீதிமன்றமாக, புதிய வளாகங்கள் கட்டுவதற்கு உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 8, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு சுற்றலாத் துறை அமைச்சர் அவர்கள்.